1970 மார்ச் 9]

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : நீர்நிலைப்பறவைகளுக்கான உய்விடங்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள அரப்பாக்கம், செம்பரம்பாக்கம் ஆகிய இடங்களிலும், வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சாவேரிப்பாக்கத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் காழ்வேலிச் சதுப்பு நிலம், திண்ணகரம், வீராணம் ஆகிய இடங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கோடிக்கரை, முத்துப் பேட்டை, தலைஞாயிறு ஆகிய இடங்களிலும், மதுரை மாவட்டத்தில் வைகை அணையிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் நென்மேனியிலும், திருநெல்வேலி மாவட்டதில் குந்தக்குளம், மூன்றடைப்பு, கங்கைகொண்டான், சீதாபரப்பநல்லூர் ஆகிய இடங்களிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தேவராயன் ஏரியிலும் உள்ளன. இந்த உய்விடங்களிலுள்ள பறவைகள், இனப்பெருக்கக் காலத்தில் குறிப்பிட்ட தொலைவிற்குள் சுடப்படுவதினின்றும், கண்ணிவைத்துப் பிடிக்கப்படுவதினின்றும் பாதுகாக்கப்படுகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் வேடந்தாங்கல் என்ற இடத்திலும், நீர்நிலைப்பறவைகளுக்கான உய்விடம் ஒன்று உள்ளது. கோயம்புத்தூர் தெற்குக் கோட்டத்திலுள்ள அமராவதி நீர்த்தேக்கம். கோயம்புத்தூர் மத்தியக் கோட்டத்திலுள்ள பவானிசாகர் நீர்த்தேக்கம் ஆகிய பகுதிகளைச் சுற்றி 1.6 கி. மீட்டர் தொலைவிற்குள் பறவைகளைச் சுடுதலும், பொறி வைத்துப் பிடித்தலும் தடை செய்யப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா : வேடந்தாங்கலில் பல்வேறு நாட்டுப் பறவைகள் வருகின்றன என்று சொல்லப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளாக அந்தப் பறவைகள் அதிக அளவில் வரவில்லை என்று சொல்லப்படுகிறதே, அப்படி வருகின்றவை வலதுசாரி நாட்டைச் சார்ந்தவைகளா ? இடதுசாரி நாட்டைச் சார்ந்தவைகளா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : சென்ற ஆண்டு வறட்சியின் காரணமாகத்தான் வரவில்லை. இவ்வாண்டு பல நாடுகளில் இருந்து இப்போதே வந்திருக்கின்றன மனிதசமுதாயத்தில் வேற்றுமையைக் களையும் முயற்சி வெற்றிபெறவிட்டாலும் பறவையினத்தில் அவை ஒன்றாகவே நமக்குச் சவாலிட்டு உலவுகின்றன.

*** 288. Q.—THIRU K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu have made Kodikkarai Reserve forest in Thanjavur district into a sanctuary; and

(b) the rare birds that are found there?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடிக்கரை ஒதுக்கக் காடு என்று எந்த ஒதுக்கக் காடும் இல்லை. அங்குள்ள ஒதுக்கக் காட்டின்பெயர், கோடியக்காடு ஒதுக்கக் காடு ஆகும். இந்த ஒதுக்கக் காட்டின் அருகில் உள்ள கிராமமே,

கோடிக்கரையாகும். கோடியக்காடு ஒதுக்கக் காட்டை, "கோடிக் கரை வனவிலங்குகள் உய்விடம்" என்கிற வனவிலங்குகள் உய்விடமாக அரசு மாற்றியுள்ளது.

(இ) உய்விடத்தின் சதுப்பு நிலங்களில், மாரி மாதங்களில், பெரும்பாலான நாரைகளும், கிளுவைகளும், பருவகாலத்தையொட்டி இடம் பெயரும் பிறபுள்ளினங்களும், காணப்படுகின்றன. இப்புள்ளினங்களில் பெரும்பாலானவை மாரி மாதங்களில் வருபவையாகும்.

திரு. கே. விநாயகம்: நாம் பார்க்காத பறவைகள் எல்லாம் வருகிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மை அல்லவா? அங்கே ஏதோ வனவிலங்கு காணப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அதன் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: அங்கே ப்ளாக் பக், ஸ்பாடெட் டீர் காணப்படுகிறது. அவற்றின் பாதுகாப்புக்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இனாம் நிலங்கள்

*235 **வினா. புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இனாம் நிலங்கள் சம்பந்தப்பட்ட புதிய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அரசு ஏதேனும் கருதியுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: புதுக்கோட்டைப் பகுதியில் இனாம் நிலங்களின் குத்தகை உரிமைக் காலளவு பற்றிய ஆய்வையே உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. அவ்வாறாயின், இப்பகுதியில் 116 பகுதி இனாம் கிராமங்களைத் தமிழ் நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் பெரு நிலங்களை (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் செயல் வரம்பின் கீழ்க் கொண்டு வந்து சட்டம் இயற்றப்பட்டுள்ளது. திருத்தச் சட்டத்தின் ஷரத்துகளை அமுல் படுத்துவது குறித்து, உயர்நீதி மன்றம் இடைக்கால தடை விதித்துள்ள நிலங்களைத் தவிர மற்றவைகளில் வருவாய் வாரியம் மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள இனாம் நிலங்கள் ஒருவகையாகவும், இன்னும் மற்ற பகுதியில் இருக்கிற நிலங்கள் வேறுவகையாகவும் எடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: புதுக்கோட்டை இனாம்கள் தனிச் சட்டத்தின் கீழ் வருகின்றன. 116 இனாம் கிராமங்கள் இவை. ஹைக்கோர்ட்டில் கூட வழக்கு இருக்கிறது.